

# ஸ்திரீகள் வேலைசெய்வதைக் குறித்தென்ன?

சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து

# சகோ. பிரன்ஹாமே, ஸ்திரீகளுக்கு ஆரோக்கியமான கணவனும் பிள்ளைகளும் இருந்தால், அவர்கள் பொது ஜன அலுவலகங்களில் பணிபுரிய அனுமதியுண்டா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-23E கேள்விகளும் பதில்களும் COD #20

Q.298. **சகோ. பிரன்ஹாமே, ஸ்திரீகளுக்கு ஆரோக்கியமான கணவனும் பிள்ளைகளும் இருந்தால், அவர்கள் பொது ஜன அலுவலகங்களில் பணிபுரிய அனுமதியுண்டா? இந்தக் கேள்வியை நான் வேறொருவருக்காக கேட்கிறேன்.**

153. நல்லது. எனக்கு அதைக் குறித்து தெரியாது. என்னால் சொல்ல இயலாது. ஆனால் நான் இவ்விதமாக உணருகிறேன். இதை நான் கூற விரும்புகிறேன். நான் ஒரு ஸ்திரீயாக இருந்து, என் கணவர் ஆரோக்கியமுள்ளவராயிருந்து, அவருக்கு ஒரு நல்ல வேலை இருந்து அவர் வேலை செய்து கொண்டிருப்பாரானால், நான் வீட்டில் தங்கி என் பிள்ளைகளைக்

கவனித்து, அவர்களை வளர்த்து, கர்த்தரை நேசிப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும். துணிகளை சலவை செய்தல் போன்ற வீட்டு வேலைகளை நான் செய்த பிறகு எனக்கு நேரம் கிடைக்குமானால், தேவனை எவ்விதம் சேவிப்பது என்பதைக் குறித்து என் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பேன்.

154. இப்பொழுது, உங்களுக்கு கடன் ஏதாகிலும் இருந்து அதை அடைப்பதற்கென உங்கள் கணவனுக்கு உதவி செய்ய முயன்றால், அவ்விதம் நீங்கள் ஏதாவதொன்றைச் செய்ய வேண்டுமென்று இருந்தால்... நல்லது. நீங்கள் பண்புள்ள பெண்ணாக வாழுங்கள். ஆனால் அது கடினம் என்று எண்ணுகிறேன். நன்றாக புரிந்து கொண்டுள்ள எந்த ஒரு மனிதனும் தன் மனைவி அத்தகைய கூட்டத்தினரின்

மத்தியில் வேலை செய்வதை விரும்ப மாட்டான். அவர்கள் அவலட்சணமான, அசுத்தமான மனிதர்கள். ஆனால் ஒரு ஸ்திரீ அந்த சூழ்நிலையில் வேலை செய்ய வேண்டியது அவசியமானால், நான் நினைக்கிறேன், அவள். அவள் உத்தம மான கிறிஸ்தவள் என்றும், அவள் நம்பிக் கையுள்ள, நம்பிக்கைக்குப் பாத்திரமான ஸ்திரீ என்றும் அவளுடைய கணவன் அறிந்திருக்க வேண்டும்.

155. இப்பொழுது, அவள் வேலை செய்யக் கூடாது என்னும் விஷயம் வரும் போது, எனக்குத் தெரியாது. பாருங்கள், அதை ஆதரிக்க வேத வசனம் எதுவுமில்லை. என் கருத்தை மட்டும் நான் தெரிவிக்கிறேன். நான் நினைப்பது என்னவெனில், ஒரு ஸ்திரீ வேலை செய்ய

விரும்பினால், அவளுக்கு வேலை செய்ய பிரியமானால்...

156, இப்பொழுது, ஸ்திரீகள் இப்படிப் பட்ட அலுவலர்கங்களில் வேலை செய்வதில் நான் நிச்சயம் விரோதமாக இருக்கிறேன், அங்கு இந்த வியாபாரிகள். அவர்கள் அசுத்தமான நகைச்சுவை துணுக்குகளைக் கூறுகின்றனர். அங்கு ஒரு நல்ல சுத்தமான ஸ்திரீ உட்கார்ந்திருந்து, இந்த அசுத்தமான, அவலட்சணமான காரியங்கள் அங்கு கூறப்படும் போது, அதற்கு விரோதமாக நான் இருக்கிறேன். அப்படிப்பட்ட காரியங்களிலிருந்து நீங்கள் வெளிவர வேண்டுமென்பது என் கருத்தாகும்.

157. ஆனால் ஒரு ஸ்திரீ தன்னைப் பண்புள்ள பெண்ணாக காத்துக் கொண்டு, பிள்ளைகள் பள்ளிக்கூடம் செல்வதற்கு

துணிகள் வாங்கவும், கடனைச் செலுத்தவும், கடன் முடியும் வரைக்கும் வேலை செய்து தன் கணவனுக்கு உதவி செய்ய முயன்றால்... இப்பொழுது, இது கர்த்தர் அல்ல, ஏனெனில் இதை ஆதரிக்க எனக்கு வேத வசனம் கிடையாது. நான் கூறுவது என் சொந்த கருத்து; அத்தகைய சூழ்நிலை எதுவுமின்றி, கொஞ்சம் அதிகம் பணம் சம்பாதித்து, மது கடைகளுக்கு சென்று குடிக்கவும், புகைக்கவும், இவ்விதம் நடந்து கொள்வதற்காக அவள் வேலை செய்ய விரும்பினால், அவள் அவ்விதம் செய்யக் கூடாது என்று எண்ணுகிறேன். அவள் வீட்டில் தங்கியிருந்து, ஒரு பண்புள்ள பெண்ணாக இருந்து, வீட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.


Otto Kirberg

**பெண்மணிகளே, நான் இதை மரியாதையுடன் கூறுகிறேன், ஒரு ஸ்திரீயானவள் சமையல் அறையை விட்டு வெளியேறுவாளானால், அவள் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து வெளியே சென்றுவிட்டாள். அது உண்மை. அவள் அந்த இடத்தைச் சார்ந்தவளாகத்தான் இருக்கின்றாள். அதற்கப்பால், அவளுக்கு வேறு இடம் கிடையாது.**

செய்தி: 56-0513 - **மோசேயின் பேரிலான போதனை**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்



பெண்மணிகளே, நான் இதை மரியாதையுடன் கூறுகிறேன், ஒரு ஸ்திரீயானவள் சமையல் அறையை விட்டு வெளியேறுவாளானால், அவள் தன்னுடைய ஸ்தானத்திலிருந்து வெளியே சென்றுவிட்டாள். அது உண்மை.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-0513 — மோசேயின் பேரிலான போதனை

23 பெண்மணிகளே, நான் இதை மரியாதையுடன் கூறுகிறேன், ஒரு ஸ்திரீ யானவள் சமையல் அறையை விட்டு வெளியேறுவாளானால், அவள் தன்னு டைய ஸ்தானத்திலிருந்து வெளியே சென்றுவிட்டாள். அது உண்மை.

அவள் அந்த இடத்தைச் சார்ந்தவ ளாகத்தான் இருக்கின்றாள். அதற்கப்பால், அவளுக்கு வேறு இடம் கிடையாது.

ஆகவே இப்பொழுது, நான் அவர்கள் பேரில் கண்டிப்பாகக் கூறவில்லை, ஆனால் வேதம் என்னவென்றும், சத்தியம்

என்னவென்பதை மாத்திரமே நான் கூறுகிறேன்...

முன்பெல்லாம் புருஷனானவன் வீட்டிற்கு தலைவனாய் இருந்து வந்தான், ஆனால் அது வேதாகம நாட்களில் அவ்வாறே இருந்து வந்தது.

அவன் இப்பொழுது ஒன்றுமேயில்லை. அவன் பொம்மையாக, அல்லது அவன் ஒரு...அல்லது குழந்தையை பராமரிப்பவ னாக அல்லது அதைப் போன்ற ஏதோ ஒன்றாக இருக்கிறான்.

ஆகவே இப்பொழுது, இல்லை, அவர்கள் ஒரு நாயை பராமரித்து வளர்க்க விரும்புகின்றனர், குடும்பக் கட்டுப்பாட் டைக் கைக்கொண்டு, ஒரு சிறிய வயதான நாயை தங்கள் கரங்களில் எப்போதும்

ஏந்திக்கொண்டிருக்கின்றார்கள், ஏனென்றால் அப்பொழுது தான் அவர்களால் இரவு முழுவதும் சுற்றிக்கொண்டிருக்க முடியும்.

24 நான்—நான் தாயைக் குறித்து பேசிக்கொண்டிருக்கவில்லை. தேவன் அவர்களை ஆசீர்வதிப்பாராக. இப்பொழுது தேசத்தை ஒன்றாக, பாதிவழியில், பிணைத்துக் கொண்டிருப்பது அதுவேயாகும், ஒரு உண்மையான, நல்ல, புனிதமான, தேவனால்-இரட்சிக்கப்பட்ட தாயாகும். அது உண்மை.

25 ஆனால் நம்முடைய ஸ்திரீகள் எவ்வளவு கீழ்த்தரமாயுள்ளனர் என்பது வெட்கத்திற்குரியது!

செய்தித்தாளிலிருந்து ஒரு துண்டை நான் வைத்துள்ளேன், கடந்த இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு வந்த இதை நான் வெட்டி எடுத்தேன், அது “அமெரிக்க பெண்களின் நல்லொழுக்கம் எங்கே போயிற்று, அதாவது, ஆறு மாதங்கள் கடல் கடந்து இருந்தபோது, ஐந்தில் நான்கு இராணுவ வீரர்கள் தங்கள் மனைவி களிடமிருந்து விவாகரத்து செய்யப்பட்ட னர், ஆகவே அவர்கள் வேறு மனிதனை மணந்துகொண்டனர்” என்று கூறப்பட்டிருந் ததே?

ஆகவே அவர்கள் அயல்நாடுகளி லிருந்து திரும்பி வரும் வரை இவர்களால் காத்திருக்க முடியவில்லை, அங்கே போர்க் களத்தில் இராணுவ வீரர்கள் மரித்துக் கொண்டிருந்தனர்!

அப்படிப்பட்டவள் அந்த புனிதமான பெயராகிய தாய் என்று அழைக்கப்படுவதற்கு தகுதியற்றவள் ஆவாள். இல்லை, அது இல்லை.

ஆதலால் “ஸ்திரீயை-வெறுப்பவன்” என்று நான் எப்பொழுதும் அழைக்கப்பட்டேன், ஆனால் நான் அவ்வாறு இல்லை.

ஒரு ஸ்திரீ என்பவள் விசேஷமாக, ஒரு அற்புதமானவள், மற்றும் ஒரு தாய் என்று நான் எண்ணுகின்றேன்.

ஆனால் அவர்கள் தங்கள் ஸ்தானங்களில் இருக்க வேண்டுமேயன்றி, ஒரு மனிதனின் ஸ்தானத்தையோ, தேவனின் ஸ்தானத்தையோ எடுத்துக்கொள்ளக் கூடாது.



ஸ்திரீயை, அவளுக்குச் சொந்தமான
சமையலறையில் வையுங்கள், அப்பொழுது
எல்லாம் சரியாகிவிடும். ஆனால் நீங்கள்
அவளை அங்கே பொது இடத்தில் பணிபுரிய
வைக்கும்போது, அவள் ஒழிந்து
போய்விடுகிறாள்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

## செய்தி: 57-10-06 எபிரெயர் நிருபத்தின் பேரிலான கேள்விகளும் பதில்களும், பாகம் 3, COD #7

776. இப்பொழுது இன்றைக்கு அமெரிக்காவில் உள்ள நம்முடைய ஸ்திரீகளை நோக்கிப் பாருங்கள்.

ஒரு சில நாட்களுக்கு முன்னர் கென்டக்கியிலிருந்து வந்த ஒரு வாலிபன் இங்கே கென்டக்கியில் உள்ள ஒரு குறிப்பிட்ட தொழிற்கூடத்தில் எண்ணூறு ஸ்திரீகள் பணிபுரிந்து கொண்டிருந்ததாகக் கூறினான். மேலும் அவன், "அவர்களில் நானூறு பேர் முற்றிலும் தெரு விபச் சாரிகளாய், திருமணமான ஸ்திரீகளாய் பிள்ளைகளோடு இருக்கிறார்கள் என்பதை

என்னால் உறுதியாகக் கூறமுடியும்" என்றான். ஒரு நபர் தன்னுடைய மனைவியை அங்கிருந்து அழைத்துச் சென்று, ஒரு குழுவினரோடு அவள் வேலை செய்தபோதே அவளை கொன்று போடவிருந்தான். மற்றொருவன் ஒரு மனிதனைச் சுடச் சென்றான். மற்றொரு வவனோ வெட்டிக் கொண்டும் சண்டை யிட்டுக்கொண்டுமிருந்தான். அவ்வாறு செய்யக்கூடாது. அது சரியல்ல.

777. ஸ்திரீயை, அவளுக்குச் சொந்த மான சமையலறையில் வையுங்கள், அப்பொழுது எல்லாம் சரியாகிவிடும். ஆனால் நீங்கள் அவளை அங்கே பொது இடத்தில் பணிபுரிய வைக்கும்போது, அவள் ஒழிந்து போய்விடுகிறாள். முற்றி லும்... நான் அதை கூறவில்லை.

778. அமெரிக்க ஸ்திரீகள் தங்க ளுடைய மூக்குகளை மேலே உயத்தின வாறு அடக்கமின்றி சிரித்து, “அதனால் ஒன்றுமில்லையே” என்று கூறுகிறார்கள். மேலும், “நீர் எனக்குக் காண்பியும்” என்கின்றனர். நிச்சயமாகவே, நீங்கள் அதைச் செய்ய வேண்டும், ஏனென்றால் நீங்கள் அதைச் செய்வீர்கள் என்று வேதம் முன்னுரைத்துள்ளது. எனவே நீங்கள் அதைச் செய்யத்தான் வேண்டும்.





# அவளுக்குச் சொந்தமான சமையலறையில் அவள் இருக்க வேண்டும்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-01-21M உன் சந்ததியார் தங்கள் சத்துருவின் வாசலை சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்

120. நான் இதைக் கூற வெறுக்கிறேன், ஆனால் நான் கூறியாக வேண்டும். பாருங்கள். பரிசுத்த ஆவியை பெற் றிருப்பதாக உரிமை கோரும் ஒரு ஸ்தீரியை நீங்கள் எடுத்துக் கொள்ளும் போது, காண முடிந்த ஒரு காரியத்தை, காணக்கூடியதை, நான் கூறுவேன், தங்களுடைய தலைமுடியை வளர் விடுவதற்கு போதிய பண்பில்லாதிருக்கும் போது எங்கோ ஏதோ காரியம் தவறாக இருக்கிறது.

வேதம், "ஒரு புருஷனுடைய உடையை ஒரு ஸ்திரீ தரித்துக்கொள்வது தேவனுக்கு அருவருப்பானது" என்று

கூறியிருக்கும்போது, ஒரு புருஷனுடைய உடையை தரித்துக்கொள்ளும் ஒரு ஸ்திரீ, அதை அணிந்துகொண்டு, அதன்பின்னரும் நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருப்பதாக உரிமை கோரி, அதைச் செய்வீர்களா?

121. நான் ஓரிகனில் ஒருநாள் அதன்பேரில் பேசினேன். எனக்கு ஒரு மிகப்பெரிய கடிதத்தை எழுதின ஒரு ஸ்திரி அங்கிருந்தாள். அவள், “சகோதரன் பிரான் ஹாமே, உங்களுக்கு ஒரு அற்புதமான ஊழியம் கிடைத்துள்ளது, ஆனால் நீரோ நிச்சயமாக அதை பாழாக்கிக் கொண்டிருக்கிறீர்” என்றாள். அவள், "இப்பொழுது, அதைக்குறித்து என்ன...” என்றாள். மேலும், “நான் எல்லா நேரத்திலும் தளர்த்தியான பணி ஆடையையே அணிகிறேன்” என்றாள். அவள், "வெளிய தோட்டத்துக்கு சென்று ஏதோ ஒன்றை-

ஏதோ ஒன்றை தோட்டத்திலிருந்து, இந்த ஆடையோடு கொண்டுவருவதைக் குறித்து என்ன. முரட்டுத் துணிகளாய், அது வேறென்ன, ஒரு ஆடையாயிருப்பதைக் காட்டிலும், இந்த விதமான தளர்த்தியான பணி ஆடைகள் மிகவும் மேலானதாக காணப்படுகிறது என்று நீர் கருத வில்லையா?" என்று கேட்டாள். மேலும், "பாருங்கள், பையன்கள் கால்நடைகளை மேய்க்க மேலே செல்லும்போது நானும் அவர்களோடு மலைக்குச ஏறிச் செல்கி றேன், மற்றும்," என்று கூறி, "நான் கொசுக்கள் அதிகம் நிறைந்த பகுதிக்குள் வருகிறேன்" என்றும் கூறினாள். "இப்பொ ழுது இப்படிப்பட்ட ஒரு-ஒரு ஆடை யில்லையென்றால், அவைகள் என்னைக் கடித்துவிடும். இந்த தளர்த்தியான பணி ஆடைகளினால் அவைகள் என்னை தொலைப்படுத்துவதில்லை" என்றாள்.

122. அப்பொழுது நான், "பட்டினியால் வாடி மரிக்கும்படியாய் உள்ள ஒரு கோழிக்குஞ்சியின் நிழலிலிருந்து தயாரிக்கப்படும் சாறைப் பார்க்கிலும் இது ஒன்றுமற்றதாய் இருக்கிறது. பரிதாபம்! அது குறித்த தேவனுடைய வார்த்தை ஒன்றும் இல்லையே. அது உன்னுடைய சொந்த கருத்தாக உள்ளது" என்றேன்.

123. தேவன், "எவருடைய வார்த்தையும் பொய், அவருடையதே உண்மையாயிருக்கும்" என்றார். என்னுடைய மனைவி ஆடைகளை அணிகிறாள். அவள் தோட்டத்திற்கு செல்கிறாள். அவளுக்கு அதை குறித்து எந்த தொல்லையும் இல்லை. எப்படியிருந்தாலும், ஒரு பெண்ணுக்கு அங்குள்ள, கால்நடைகளை மேய்க்கும் ஆண்களின் கூட்டத்துடன், எப்படியும் வேலையில்லை. அவளுக்குச்

சொந்தமான சமையலறையில் அவள் இருக்க வேண்டும். அது உண்மை.

124. அவர்கள் ஒரு சாக்குப்போக்கு கண்டறிய முயற்சித்துக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் ஏதும் இல்லை. தேவனுடைய வார்த்தை தெளிவாயுள்ளது, தேவனுடைய சித்தத்தின் ஆவியினால் பிறந்துள்ள ஒரு ஸ்திரி. -மேலும் தேவனுடைய ஆவியினால் பிறந்த ஒரு மனிதன் தன்னுடைய மனைவி அந்த விதமாக நடந்துகொள்ள அனுமதிக்க மாட்டான். அவர் என்ன கூறினார்? "அவள் தன்னுடைய முடியை எடுத்து, கத்தரித்துக் கொண்டால், அவளுடைய தலையை கனவீனப்படுத்துகிறாள்." அவளுடைய கணவனே அவளுடைய தலை. அவள் கனவீனமற்றவளாய் இருக்கிறாள்.





அவள் சமையலைறையை
விடும்போது, தாய் என்னும்
முறையில் அவள் வேலை
செய்ய வேண்டிய இடத்தை
விட்டு விடுகிறாள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 62-0706 யேகோவா யீரே #2

50. இந்த தூதன், "நான் செய்யப் போகிறதை ஆபிரகாமுக்கு மறைக்கமாட் டேன், ஒரு உற்பவ காலத்தில் நிச்சயமாக உன்னிடத்திற்குத் திரும்ப வருவேன்'' என்று கூறினதாக நாம் காண்கிறோம். கவனியுங்கள், அவர் அவனை ஆபிராம் என்றழைக்கவில்லை, ஆபிரகாம் என்ற ழைத்தார். அவனுடைய பெயர் மாற்றப் பட்டதை அவர் எப்படி அறிந்தார்? அவர்தான் அவனுடைய பெயரை மாற்றியது. நிச்சயமாக. அவ்வாறே அவர் சாராய் என்றழைக்கவில்லையென்று உங்க ளுக்கு தெரியுமா? சாராள் ''உன் மனைவி சாராள் எங்கே?'' அவன் விவாகமானவன் என்றும் அவனுக்கு சாராள் என்னும் பெயர் கொண்ட மனைவியிருக்கிறாள் என்றும்

அவருக்கு எப்படித் தெரியும்? ஆபிரகாம், ''உமக்குப் பின்புறமாய் உள்ள கூடாரத்தில் இருக்கிறாள்,'' என்றான்.

51. என்ன ஒரு உத்தமமான பெண் மணி!

இன்றைக்கு பெண்கள் அதிகமாக பேசுகின்றனர். அவர்களுடைய கணவ ரைப் பேச அவர்கள் விடுவதில்லை.

அவர்கள் கையில் ஒரு சிகரெட்டை வைத்துக் கொண்டு, குட்டை கால் சட்டை அணிந்து அங்கு வந்து அவர்களே எல்லாவற்றையும் பேசி முடித்து விடு கின்றனர்.

என்ன ஒரு தாறுமாறான ஜனங்கள் அவள் தலைமை சமையற்காரியாகவும், குப்பி (Bottle) கழுவுபவளாகவும் இருக்க வேண்டியவள்.

அவள் சமையலைறையை விடும் போது, தாய் என்னும் முறையில் அவள் வேலை செய்ய வேண்டிய இடத்தை விட்டு விடுகிறாள்.

இப்பொழுது நாம் காண்கிறோம், பின்னால் இருந்து கொண்டு உத்தமமாக தங்களை நடப்பித்துக் கொண்ட சீமாட்டிகள்; அவர்களுடைய தலைவன் தான் தீர்மானம் அனைத்தும் செய்பவர்.

யாராகிலும் ஒரு மனிதன் இதை தன் மனைவியிடம் எடுத்துக் கூறும்போது, அவள், “இப்பொழுதே உமக்கும் காண்பிக்கிறேன்” என்று சொல்லி சிகரெட்டு புகையை அவள் வாயிலிருந்து ஊதுகிறாள் (சகோ. பிரன்ஹாம் ஊதிக் காண்பிக்கிறார் - ஆசி).

பயங்கரமான பார்வை, அப்படிப் பட்டதை நான் கண்டதேயில்லை!

அங்கு நின்று கொண்டு அந்த பெண்ணை கவனித்து, அவளுக்குள் இருக்கும் ஆவியை நீங்கள் பகுத்தறிந்தால், அவள் ஒருக்கால் ஏதோ ஒரு சபையின் பாடற் குழுவில் பாடுகிறவளாயிருப்பாள், ஓ, அப்படிப்பட்ட நாளில் நாம் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்.

நாம் அந்த நாளை அடைந்துள்ளோம் என்பதில் வியப்பொன்றுமில்லை. நான் என்ன கூறுகிறேன் என்பதை நீங்கள் கிரகித்துக் கொண்டிருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

52. கவனியுங்கள். அது அங்கிருந்தது. சாராள் கூடாரத்தில் தங்கியிருந்து நல்லொழுக்கத்துடன் நடந்து கொண்டாள்.





# அவள் சமயலைறையில் இருக்க வேண்ழயவள்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-0120E இன்னும் ஒரு விசை கர்த்தாவே

60. ஆனால் சிம்சோன், “கர்த்தாவே, இந்த பெலிஸ்தரரோடே கூட நானும் மடியட்டும்'' என்று சரியான ஜெபத்தை ஏறெடுத்தான். அவன் தவறு செய்தான். ஆனால், ''நான் மடியட்டும்.

''உங்கள் மேல் வெற்றி கொண்ட சத்துருவுக்கு நீங்கள் சாக ஆயத்தமா யிருக்க வேண்டும். உங்கள் சொந்த கருத்துக்களை விட்டுவிட நீங்கள் ஆயத்தமாயிருக்க வேண்டும். தேவனு டைய வல்லமையை மறுபடியும் பெறு வதற்கென சிம்சோன் கிரயத்தைச் செலுத்த ஆயத்தமாயிருந்தான்.

பெண்களாகிய நீங்கள் உங்கள் தலை மயிரை வளரவிட ஆயத்தமாயிருக்கிறீர்களோ என்று வியக்கிறேன்.

அதை மனைவியிடம் கூற மனிதனுக்குப் போதிய தைரியம் உள்ளதோ என்று வியக்கிறேன்.

நீங்கள் வீட்டுக்கு தலைவராக இருக்க வேண்டியவர்கள்.

ஆனால் அவளோ கழுத்தாக இருந்து கொண்டு, உங்களைத் திருப்பிக் கொண்டிருக்கிறாள். அது முரணான ஒன்று!

மிகுந்த அசைவூட்டும் ஒரு எழுப்புதல் இந்த பெண்களை பொதுஜன வேலைகளிலிருந்தும், தெருவில் நடக்கும் காவல்காரர் வேலையில்லிருந்தும் எடுத்துப்போடும் என்று நினைக்கிறீர்களா?

அவள் சமயலைறையில் இருக்க வேண்டியவள்.

நீங்கள் மறுபடியும் அவளை அந்த இடத்துக்கு கொண்டு வர முடியுமென்று நினைக்கிறீர்களா? இல்லை, ஐயா, அவள் இரட்சிக்கப்பட்டாலொழிய அப்படி செய்யமாட்டாள்.

அவள் இரட்சிக்கப்பட்டால், அப்படி செய்வாள் அப்பொழுது நீங்கள் அவளிடம் அதைக் குறித்து சொல்ல வேண்டிய அவசியமே இராது. அவள் தனது இடத்தை அறிந்து கொள்வாள். “பரிசுத்த ஆவியானவர் என்னை வழி நடத்துகிறார்,'' என்று நீ கூறுகிறாயா? வார்த்தைக்கு முரணான ஒன்றுக்கா? அதை பரிசுத்த ஆவி என்று அழைக்காதே.




அவள் வீட்டு வேலை அதிகம் செய்பவள்.
சமையலறையிலோ அல்லது வேறெங்காவது
அவள் சதா வேலை செய்து கொண்டேயிருப்பாள்...
அவளை அறிந்துள்ள உங்களுக்கு துணி சலவை
செய்யும் இயந்திரத்தை அவள் எப்பொழுதும்
இயக்கிக் கொண்டேயிருப்பாள் என்பது தெரியும்.
சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 63-1110E
## உங்களிலிருக்கிறவர்

71. நான் மலையில் நடந்து சென்று கொண்டேயிருந்தேன்... ஒலிநாடாவின் இந்தப் பாகத்தை என் மனைவி கேட்கமாட்டாள் என்று நம்புகிறேன். பாருங்கள்? உங்களிடம் ஒன்றைக் கூறப் போகின்றேன். நான் உங்களிடம் உண்மையையே கூறுகின்றேன். அதுதான் சரியான முறையாகும். ஒவ்வொரு விவாக நாளன்றும் நான் இத்தகைய வேட்டைப் பயணம் செல்வதைக் குறித்து என் மனைவி ஏன் முறுமுறுப்பதில்லையென்று நான் அடிக்கடி யோசிப்பதுண்டு. நான் என்ன நினைத்தேன் தெரியுமா? விவாக நாளன்று அநேகர் வீட்டிற்கு வருவார்கள். நான் பயந்த சுபாவமுடையவன் (nervous) என்று

உங்களுக்குத் தெரியுமல்லவா? எப்பொழுதும் நான் தேவனைக் குறித்தும், வேதத்தைக் குறித்துமே பேச விரும்புகிறேன். எனவே, சில நாட்கள் நான் வேட்டைக்குச் சென்றால் அவளுக்குத் தொல்லை சற்று நீங்கியிருக்கும் என்று நினைக்கிறாளோ என்னமோ! என்று எண்ணினேன்.

72. அதற்காக அவளிடம் நான் மன்னிப்புக் கோருகிறேன். இத்தகைய சிந்தை என்னில் எழுந்ததற்காக நான் தேவனிடம் மன்னிப்பு கோருகிறேன். ஏனெனில் இந்த எண்ணம் என் மனதில் எழுந்த வண்ணமாக இருந்தது.

அவள் வீட்டு வேலை அதிகம் செய்பவள்.

சமையலறையிலோ அல்லது வேறெங்காவது அவள் சதா வேலை செய்து கொண்டேயிருப்பாள்...

அவளை அறிந்துள்ள உங்களுக்கு துணி சலவை செய்யும் இயந்திரத்தை அவள் எப்பொழுதும் இயக்கிக் கொண்டேயிருப்பாள் என்பது தெரியும்.

அவள் வேலை செய்து கொண்டிருக்கும் போது நான் அவளிடம், ''துணி சலவை செய்வதை நிறுத்திவிட்டு வந்து என்னுடன் பேசிக் கொண்டிரு. நான் உன்னை நேசிக்கிறேன். நீயும் என்னை நேசிக்கிறாய் என்று நீ கூற விரும்புகிறேன்'' என்பேன்.

“உங்களை நான் நேசிக்கிறேன் என்று உங்களுக்குத் தெரியும்'' என்று அவள் கூறிவிட்டு, மறுபடியும் துணி சலவை

செய்யும் பணியில் மும்முரமாக ஈடுபடு வாள்.


''அதை நிறுத்திவிட்டு, என்னுடன் உட்கார்ந்து பேசு'' என்பேன்.

“ஓ, பில் (Bill), எனக்கு எத்தனையோ வேலையிருக்கிறது'' என்பாள்.

“நான் வேட்டைக்குச் சென்றால், வேலை செய்வதற்கு அவளுக்கு அதிக நேரம் கிடைக்குமென்று எண்ணுகின்றாள் போலும்'' என்று நினைத்துக் கொண்டேன். வேதாகமம் எனக்கு முன்னால் இருக்கிறது. நான் தேவனுடைய வார்த்தைக்கு முன் னால் உள்ளதை நீங்கள் காண்கிறீர்கள். நான் மலையில் நடந்து சென்று கொண் டிருந்தபோது ஏதோ ஒன்று என்னில் சம்பவித்தது.



அவளுக்குள்ள இடம் மனிதனின் ராணி என்னும் முறையில் வீடு மாத்திரமே. அதற்கு வெளியில் அவளுக்கு ஒன்றுமேயில்லை. அது உண்மையென்று நாமறிவோம். நீங்கள் எங்குமே காணமுடியாது. அது பழமை நாகரீகங் கொண்டதாய் ஒலிக்கலாம். ஆனால் அதற்கு நான் பொறுப்பு



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-0815 இதை அறியாமலிருக்கிறாய்

22. அரிசோனாவிலுள்ள டூசானில், ஒரு பெண் நியாயாதிபதி நகரத்தில் எங்களுக்குண்டு. அதன் காரணமாக நகரம் மாசுபட்டுள்ளது.

ஒரு ஸ்திரீக்கு அரசியலில் எந்த வேலையும் கிடையாது.

அவளுக்கு சபையால் எந்த வேலையோ அதிகாரமோ கிடையாது.

அவளுக்குள்ள இடம் மனிதனின் ராணி என்னும் முறையில் வீடு மாத்திரமே. அதற்கு வெளியில் அவளுக்கு ஒன்றுமே யில்லை. அது உண்மையென்று நாமறி

வோம். நீங்கள் எங்குமே காணமுடியாது. அது பழமை நாகரீகங் கொண்டதாய் ஒலிக்கலாம். ஆனால் அதற்கு நான் பொறுப்பு.

இவ்வுலகைவிட்டு நான் கடந்து சென்ற பிறகு இந்த ஒலி நாடாக்களும் புத்தகங் களும் நிலைத்திருக்குமென்று நானறி வேன். இப்பொழுது சிறுவர்களாக உள்ள உங்களில் அநேகர் இது முற்றிலும் உண்மையென்பதை வரப்போகும் நாட் களில் அறிந்து கொள்வீர்கள். ஏனெனில் நான் கர்த்தருடைய நாமத்தினால் இதை உரைக்கிறேன்.



# அவள் அலுவலக வேலைக்காக ஒருபோதும் உண்டாக்கப்படவேயில்லை



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: அழகுசாதனங்கள் பூசப்பட்ட முகத்தையுடைய யேசபேல், 56-1003, Para 52

-------

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**

-------

நீங்கள் செய்கிற ஒரே காரியம் இதோ இருக்கிறது.

இப்பொழுது, நீங்கள் இன்றிரவில் சபையை விட்டுப் போகும்போது, நீங்கள், "சகோதரன் பிரன்ஹாம் சரியாக இருக் கிறார் என்று நான் ஒருவிதத்தில் நம்பு கிறேன் என்று உங்களுக்குத் தெரியும். ஆம், இப்பொழுது, அது சத்தியமாக இருக்கிறது" என்று கூறலாம்.

ஆனால் நாளையோ நீங்கள் போகக் கூடாத நேரத்தில் வேலைக்குள் சரியாகத் திரும்பிப் போய்விடுவீர்கள்.

உங்களுடைய கணவர் வியாதிபட்டவ ராயிருந்தால், நீங்கள் அதைச் செய்வது அவசியம் தான்.

ஆனால் அவ்வாறு இல்லை என்றால், அன்பு சகோதரியே, கவனி, தேவன் உன்னை ஒரு இடத்திற்காகத்தான் உண் டாக்கினார், (அது) சமையலறை.

நீ அங்கிருந்து வெளியே போவா யானால், நீ அவருடைய சித்தத்திற்கு வெளியேயிருக்கிறாய். அதை நினைவில் வைத்துக்கொள்.

வீட்டில் ஒரு துணையாகவும் உதவி யாகவும் இருக்கும்படிக்கே ஸ்திரீகள் உண்டாக்கப்பட்டார்கள்.

அவள் அலுவலக வேலைக்காக ஒருபோதும் உண்டாக்கப்படவேயில்லை.

அது அதிகமான அவமானத்திற்கும் மற்றும் விவாகரத்துக்கும் மற்றும் காரியங்களுக்கும் காரணமாகிறது.

இன்றைக்கு, உங்களுடைய அழகான பட்டணம் கூட தெருவிலிருக்கும் பெண் போலீஸ்காரிகளைக் கொண்டு, நம்முடைய பட்டணங்களின் அளவுக்கு தரக்குறைவாகி விட்டது.

ஆயிரக்கணக்கான மனிதர்கள் ஒரு வேலை இல்லாமல் தெருவில் நடந்து கொண்டிருக்கும்போது, அது சிகாகோவுக்கு ஒரு அவமானமாகவோ அல்லது வேறு எதுவாகவோ இல்லையா. அது முற்றிலும் சத்தியமாயிருக்கிறது. மேலும் அதிகாரமா? ஓ, என்னே. "ஏய், அங்கே போ." நீ இரவு உணவுக்காகவோ அல்லது ஏதோவொன்றிற்காகவோ உன்னுடைய கணவனுக்கு ஒரு பழ கேக் உணவை (pie) சமைத்துக்கொண்டு சமையலறையில் இருந்தாக வேண்டும். அது முற்றிலும் சரி.



நீதிமொழிகள் 31:10

குணசாலியான ஸ்திரீயைக்
கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய
விலை முத்துக்களைப்பார்க்கிலும்
உயர்ந்தது.






# ஸ்திரீகள் வேலைசெய்வதைக் குறித்தென்ன?



சகோ.வில்லியம் பிரன்ஹாம்
அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து